# பஸிலின் கோட்டையை கைப்பற்றினார் ரணில்!

* கம்பஹாவில் மொட்டு எம்.பிக்கள் எழுவர் ரணில் பக்கம்
* 10 ஆம் திகதி பரப்புரைப் போர் ஆரம்பம்
* புத்தாண்டுக்கு பின்னர் பொதுத்தேர்தலுக்கு நாள் நிர்ணயம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் கோட்டையாக விளங்கிய கம்பஹா மாவட்டத்தில் உள்ள மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார்.

மொட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டு சபைக்கு தெரிவான 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் மாத்திரமே தற்போது மொட்டுக் கட்சி பக்கம் நிற்கின்றனர்.

2020 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் 65.76 சதவீத வாக்குகளுடன் 13 ஆசனங்களை மொட்டுக் கட்சி கைப்பற்றியது.

மேற்படி 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் கம்பஹா மாவட்ட தலைவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அமைச்சர் நளின் பெர்ணான்டோ, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளனர்.



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்க வேண்டும் எனவும் அறிவித்து வருகின்றனர். அதேபோல் மொட்டுக் கட்சி பட்டியலில் கம்பஹா 2

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 23 புதன்கிழமை 06.03.2024 கதிர் 196

## நாட்டை அழிக்கின்ற ஆட்சியாளர்களை விரட்டியடிக்க அனைவரும் அணி திரள்க!

### தேசிய மக்கள் சக்தி அழைப்பு

"ரணில் - ராஜபக்ஷ அரசு ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே இறங்கியிருக்கின்றது. இதற்கு எதிராக நாங்கள் பெருந்திரளான பெண்களை அணித்திரட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றோம். நாட்டை அழிக்கின்ற இந்த ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்குப் பொதுமக்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்." - என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது - 2



## மின்விசிறியின் கீழாகவே சிறுநீரக சத்திர சிகிச்சை

*தேசிய சிறுநீரக சிகிச்சை நிலையத்திலுள்ள குளிரூட்டிகள் முற்றுமுழுதாக 100 வீதம் செயலிழந்துள்ளதாகவும், நேற்றைய தினம் (05) மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையானது மின் விசிறியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ரெம-16)*

## பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸ் நீர்த்தாரைப் பிரயோகம்

### இரண்டு மாணவர்கள் கைது



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பு - புஞ்சி பொரளை பகுதியில் இன்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிஸாரால் நீர்த்தாரைப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்திரஜித் உள்ளிட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இன்று பிற்பகல் முதல் புஞ்சி பொரளை பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (அ)

## பல்கலைக்கழக பிரவேசம் பற்றிய யோசனை குறித்து க.பொ.த சா-தர பரீட்சையின் பின்னர் ஆராயத் தயார்!



### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுதிய மாணவர்கள் தகுதி காண் பரீட்சையொன்றிற்கு முகம்கொடுத்த பின்னர் நேரடியாக அரச பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்கக்கூடிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலிக்கத் தயார் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கல்விக் கொள்கையின் கட்டமைப்பில் இது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், 2

## ஸ்ரீலங்கன் விமான சேவையின் விற்பனை 45 நாட்களுக்கு ஒத்திவைப்பு
## 1.2 பில்லியன் ரூபாய் கடனுடன் வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை

ஸ்ரீலங்கன் விமான சேவையின் விற்பனை தொடர்பான விலைமனு கோரலை 45 நாட்களுக்கு ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். மேலும், விமான சேவைக்கு சொந்தமான 510 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை திறைசேரிக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் தற்போது சுமார் 1.2 பில்லியன் ரூபாய் கடனில் இருப்பதாகவும் இந்த கடன் தொகையுடன் அதனை வாங்குவதற்கு எந்தவொரு விமான நிறுவனமும் முன்வரவில்லை எனவும், அதன் காரணமாக, மார்ச் 5ஆம் திகதி மாலை 3:00 மணியுடன் முடிவடையவிருந்த விலைமனு கோரலை இன்னும் 45 நாட்களுக்கு நீட்டிக்க முடிவெடுத்துள்ளோம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், ஸ்ரீலங்கன் விமான சேவையின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில் அடுத்த 06 மாதங்களுக்கு 60 முதல் 70 மில்லியன் டொலர்கள் திறைசேரியிலிருந்து வழங்கப்படவுள்ளது. இதனால், தற்போதைய நிலையை விட உயர்ந்த தரத்திலான சேவையினை ஸ்ரீலங்கன் விமான சேவையினால் வழங்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இலக்கை அடைவதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உட்பட அனைத்து 2

## விகாராதிபதியின் வங்கிக் கணக்கில் கைவைத்த போலி வங்கி அதிகாரி!

### 5 லட்சம் ரூபா மாயமானது

வங்கி அதிகாரியாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு அம்பாறையிலுள்ள பௌத்த விகாராதிபதி ஒருவரிடம் 5 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபரை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர். குறித்த விகாராதிபதியின் வங்கிக் கணக்கிலிருந்தே இவ்வாறு பணம் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தம்மை வங்கி அதிகாரி என போலியாக கூறிக் கொண்ட இந்த நபர் , விகாராதிபதியின் கைப்பேசிக்கு தொடர்பு கொண்டு, விகாராதிபதியின் அடையாள அட்டை இலக்கம் தெளிவாக இல்லை எனவும், மீண்டும் அந்த இலக்கங்களை கூறுமாறும் கேட்டுள்ளார். வங்கி வேலையாகத் தான் இவர் இப்படி அடையாள அட்டை இலக்கத்தை கேட்கின்றார் என நம்பிய விகாராதிபதி குறித்த நபருக்கு தனது அடையாள அட்டை எண்ணை கொடுத்துள்ளார்.

மறுநாள் விகாராதிபதி தனது வங்கிக் கணக்கை 2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மின் இணைப்பை மீளப் பெறுதல் கட்டணம் 800 ரூபாவாகக் குறைப்பு

*மின் இணைப்பை மீளப் பெறுவதற்கான கட்டணத்தை 3000 ரூபாவில் இருந்து 800 ரூபாவாகக் குறைக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.*

*பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க நேற்று (05) ஊடகங்களுக்கு இந்த விபரத்தைத் தெரிவித்தார்.*

*மின் இணைப்பு மீளமைக்கப்படும்போது வாடிக்கையாளர்கள் செலுத்த முடியாத தொகையை தவணை முறையில் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*மின்கட்டணம்குறைக்கப்பட்டதால்தற்போது 30 அலகு பயன்படுத்தும் வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய தொகை 540 ரூபாயிலிருந்து 390 ரூபாவாக குறைந்துள்ளது.*

*60 அலகுகளை பயன்படுத்தும் ஒருவர் செலுத்த வேண்டிய தொகை 1,620 ரூபாயிலிருந்து 1,140 ரூபாயாக குறைந்துள்ளது.*

*90 அலகுகளை பயன்படுத்தும் ஒருவர் செலுத்த வேண்டிய தொகை 3,990 ரூபாயிலிருந்து 2,800 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.*

*120 அலகுகளை பயன்படுத்தியவருக்கு கட்டணம் 6,460 ரூபாயில் இருந்து 4,900 ரூபாயாக குறையும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (04)*

## பல்கலைக்கழக பிரவேசம்.....

எதிர்வரும் கல்வித்துறை தொடர்பான துறைசார் கண்காணிப்புக்குழுவில் இது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, தனியார் பல்கலைக்கழகங்களில் இவ்வாறான நடைமுறை பின்பற்றப்படுவதாகவும், எனவே இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் உயர்கல்விக்கு பிரவேசிக்கும் நேரத்தை நிர்வகிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்தார். (ரெம-16)

## விகாராதிபதியின் வங்கிக்....

சரிபார்த்தபோது, அதில் 5 லட்சம் ரூபாய் எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து இது தொடர்பாக பொலிஸில் செய்ததையடுத்து குறித்த போலி வங்கி அதிகாரியை பொலிஸார் தேடி வருகின்றனர். இதுவொரு குழுவாக செய்த மோசடியாக இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன. (ரெம-17)

## ஸ்ரீலங்கன் விமான.....

ஊழியர்களும் திறமையாகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்ற வேண்டும். துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளரிடம் விமான சேவை செயல்பாடுகளை கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை விமான நிறுவனத்தின் விவகாரங்களைச் சரிபார்க்க வேண்டும்.

இந்த காலகட்டத்தில் ஊழியர்களின் ஊதியத்தை அதிகரிக்கவோ அல்லது கொடுப்பனவுகளை அதிகரிக்கவோ முடியாது. தேவையற்ற வெளியூர் பயணங்கள் மற்றும் தேவையற்ற செலவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த 6 மாத காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் முன்னேற்றம் காணா விட்டால், பணிப்பாளர் சபை மாற்றம் செய்யப்படும்.

விமான நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் ஆறாயிரம் ஊழியர்களின் தொழில் உத்தரவாதத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்" என்றார். (ரெம-15)

## பஸிலின் கோட்டையை .....

மாவட்டத்தில் விருப்பு வாக்கு பட்டியலில் முதலிடம் பிடித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் செயற்பட்டு வருகின்றார். அவர் தற்போது சஜித் ஆதரவு நிலைப்பாட்டில் உள்ளார்.

இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான கோகிலா குணவர்தன, உபுல் மகேந்திர ராஜபக்ச, பிரதிப் விதான, மிலான் ஜயதிலக்க ஆகியோரே மொட்டு கட்சி பக்கம் நிற்கின்றனர். எனினும், நாமல் ராஜபக்ஷ தலைமையில் திவுலபிட்டிய ஆசனத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள எம்.பிக்களில் ஒருவர் மாத்திரமே (இந்திக அநுருத்த) பங்கேற்றுள்ளார்.

கம்பஹா மாவட்டம் என்பது பஸில் ராஜபக்ஷ வின் அரசியல் கோட்டையாகவும் விளங்குகின்றது. அம்மாவட்டத்தில் போட்டியிட்டே அவர் 4 இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அதேவேளை, பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. இந்தச் சந்திப்பின் பின்னர் தீர்க்கமான சில அரசியல் முடிவுகள் தொடர்பான அறிவிப்புகள் வெளியாகவுள்ளன .

தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும் என்று ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கியஸ்தரான இலங்கைக்கான முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் பஸில் ராஜபக்ஷ வுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின்னரே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

“ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். புத்தாண்டு முடிந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும். அதில் பெரும்பான்மைப் பலத்தை மொட்டுக் கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடியும் வரை ரணிலுக்கு ஆதரவு வழங்குவோம். அதன்பின்னர் ஆதரவு இல்லை. முதலில் நாடாளுமன்றத் தேர்தலே நடத்தப்படும். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் பற்றி பேசுவோம்.” - என்று உதயங்க வீரதுங்க மேலும் கூறினார்.

பஸில் ராஜபக்ஷ மார்ச் 5 ஆம் திகதி நாடு திரும்புவார் என்ற தகவலை முதன்முதலில் உதயங்க வீரதுங்கவே வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சி மார்ச் 10 ஆம் திகதி முதலாவது மக்கள் கூட்டத்தை குருநாகல், குளியபிட்டியவில் நடத்தவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சி அழைப்பையேற்று ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் எனவும், சுமார் ஒரு வருடங்களுக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் மேடையேறுகின்றார் எனவும் அவர் ஐ.தே.கவின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (அ)

## நாட்டை அழிக்கின்ற ....

“எதிர்வரும் 8 ஆம் திகதி 113 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பாகிய நாங்கள் கொண்டாடவிருக்கின்றோம். இத்தருணத்தில் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாது, மருத்துச் செலவைத் தாங்கிக்கொள்ள முடியாது நெருக்கடியான வாழ்க்கைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக 70 இலட்சம் பேர் அதாவது, இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் அடுத்தவேளை உணவை பெற்றுக்கொள்வதற்கு போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதற்கான பிரதான காரணம் 2022 ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியாகும். இந்தப் பொருளாரதார நெருக்கடியின் காரணத்தால் கடந்த இரு வருடங்களில் 15 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இம்மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. நில ஆக்கிரமிப்பு தொடர்கிறது. விவசாயக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதைப்போல, இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையில் சிக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் காணிப் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, கணவனை இழந்த பெண்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினை போன்றவற்றுக்கு இன்னமும் தீர்வு கிட்டவில்லை. இவற்றுக்கு எவ்வித பதிலையும் வழங்காது அரசு கள்ள மௌனம் சாதித்துக்கொண்டிருக்கின்றது.

ஆனால், அரசோ கூத்துக்களைக்காண்பித்து மக்களைத் திரட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றது. தற்போது 24 குடும்பங்களுக்கு அஸ்வெசும எனும் பெயரில் நிவாரணம் வழங்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. சமுர்த்தி கொடுப்பனவு பெற்ற 16 இலட்சம் குடும்பங்கள் தற்போது அஸ்வெசும திட்டத்தில் 24 இலட்சமாக அதிகரித்திருக்கின்றது. எனவே, மேலும் 8 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளமை தெளிவாகின்றது.

அதுமட்டுமன்றி, தற்போதைய விலைவாசியுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற 1000 ரூபா சம்பளம் நாளாந்த வாழ்க்கைக்கு போதாமல் இருக்கின்றது. இந்த மக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையை எடுக்க வேண்டும். மலையகத்தில் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும். அந்த மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியாகிய நாங்கள் வலியுறுத்துகிறோம்.

நாளுக்கு நாள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. அநீதிக்கு எதிராகப் போராடுகின்ற மக்களை இந்த அரசு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் ஒடுக்கி வருகின்றது. ரணில் - ராஜபக்ஷ அரசு ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே இறங்கியிருக்கின்றது. இதற்கு எதிராக நாங்கள் பெருந்திரளான பெண்களை அணித்திரட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றோம். நாட்டை அழிக்கின்ற இந்த ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்குப் பொதுமக்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.” - என்றார்.




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சர்வதேசமகளிர் தின நிகழ்வுகள் களுவாஞ்சிக்குடியில் ஆரம்பம்




(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தினால் "அவளுடைய பலம் - நாட்டிற்கு முன்னேற்றம்" எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் வழிகாட்டுதலின்கீழ்ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (04) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

முதல் நிகழ்வாக கலைகள் மற்றும் அரங்க விளையாட்டுகளின் மூலமாக "மகளிர்மனவெழுச்சி ஆற்றுப்படுத்துகை" எனும் 2 தினங்களைக் கொண்ட நிகழ்வானது பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆரம்பமானது.

இரண்டாம் நாளில் கலந்து கொண்டிருந்த மகளிர் சங்க உறுப்பினர்களின் கலைப்படைப்புகள் மற்றும் கலை நிகழ்வுகள் நடந்தன. இந்நிகழ்வில் பிரதேச செயலக கிராம சேவை பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 மகளிர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக ம. நிரோஷினிதேவி (சமதை பெண்நிலைவாத நண்பிகள் குழு), வி.சிந்துஉஷா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும்ப. ராஜதிலகன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோர்கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பான முறையில்நடாத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வினை பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் ஒருங்கிணைப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் அஞ்சல் குடும்பத்தினரின் பிரியாவிடையும் கௌரவிப்பும்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

இறக்காமம் கட்டுப்பாட்டு அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்கான கௌரவிப்பும் பிரியாவிடை வைபவமும் அஞ்சல் அலுவலக அதிபர் ஆர்.எம்.எம் .வாசினி ரத்னாயக்க தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பிரியந்த பிரதம அதிதியாகவும், இறக்காமம்

கோட்டக் கல்வி அதிகாரி யு.எல். மஹ்மூதுலெவ்வை, இலக்காமம்அஸ்ரப் தேசிய பாடசாலை அதிபர் எம்.எஸ். லாஹிர், பிரதி அதிபர் ஏ.ஆர்.எம். அமீன், இறக்காமம் ஜாமியுத் தையார் பள்ளிவாசல் தலைவர் முகம்மது அலியார் மற்றும் ஆசிரியர் இஸ்ஹாக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 40 வருடங்கள் தபால் தரம் பிரிப்பாளராய் இறக்காமம் தபால் அலுவலகத்தில் சேவையாற்றிச் சென்ற எச்.எல்.ஏ. பௌசுல் அமீன் மற்றும் 34 வருடங்கள் தபால் உத்தியோதராக கடமையாற்றி ஓய்வுபெற்ற எம்.எஸ். எம்.சமூக்கூன் ஆகியோர் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# காத்தான்குடியில் இரத்ததான முகாம்



(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடியில் அல் பஜ்ர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் அண்மையில் இடம் பெற்றது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை இரத்த தான வங்கிக்கு வழங்குவதற்காக இந்த இரத்த தான முகாம் நடைபெற்றது. இதன் போது இரத்த தானம் செய்தவர்களுக்கு அல் பஜ்ர் நலன்புரி அமைப்பினால் நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

அல் பஜ்ர் நலன்புரி அமைப்பின் தலைவரும்சமூகசெயற்பாட்டாளருமான எஸ்.ஏ.கே.பழீலுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப வைபவத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் ஜாபீர் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி டொக்டர் திருமதி அலீமா அப்துர் ரஹ்மான் உட்பட பிரிவு கிராம உத்தியோகத்தர் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் அல் பஜ்ர் நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்



# மிதி வெடி



*நீங்கள் உங்கட கடமையைச் சரியாச் செய்யாட்டி, நாங்கள் எங்கட வேலையை முடிக்கிறதுக்காக அடுத்த "லெவலுக்கு" போவம் தானே..?*

*ஆர் குத்தினாலும், அரிசியாகினாச் சரி தானே?*

*என்னெண்டய்யா நீங்க அங்க போகலாம்...?*

*அப்பிடியெண்டா அங்க போய் அலுவலப் பாருங்கோ.... இங்காலப்பக்கம்வரப்படாது....!*

*ஓர் அரசாங்க அதிகாரி... மக்களிண்ட வரிப் பணத்தில - எங்கட காசில சம்பளம் வாங்கிற ஓர் அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்யாமல்விட்டுட்டுச்செய்யிற சண்டித்தனத்தப் பார்த்தியளே?*

*இப்பிடிப் பல சம்பவங்கள் "கவர்மென்ற்" கந்தோருகளில நடந்து கொண்டு தான் இருக்குது. சிலது தான் வெளியில வருகுது.*

*இப்பிடியானவையளால உண்மையா - நேர்மையா, மனச் சாட்சிக்குப் பயந்து வேலை செய்யுற ஒரு சிலருக்கும் கெட்ட பேர் பாருங்கோ....!*

*வேலை செய்தமோ இல்லையோ மாசம் முடியச் சம்பளம் வரும். "மணியடிச்சாச. சோறு" எண்டுறது போல......*

*அந்த அலுவலகக் கதிரையில இருந்தா தாங்கள் மட்டும் தான் எல்லாமே எண்ட நினைப்பு.... ஆரிட்டைச் சொல்லி அழுகிறது?*

*இந்தச் சீத்துவத்தில நாட்டை முன்னேற்றுறன் பேர்வழி எண்டு ஜனாதிபதியார் கனவு காணுறாராம்.... !*

*எல்லாத்தையும் "டிஜிற்றல்" மயப்படுத்துறன் பேர்வழி எண்டு செய்ய வெளிக்கிட்டு ஒண்டும் ஆன பாடில்ல.....*

*"ஒன்லைன் பாஸ்போட்" ஆரம்பத்தில ஓடின வேகத்துக்கு நாடு எங்கயோ போகுமெண்டு நினைச்சன். அது நூறு மீற்றர் ஓட்டப் பந்தயக் கணக்கா ஐயாயிரம் மீற்றரை ஓடவெளிக்கிட்டு அப்பிடியே வழியில மல்லாந்து போய்க் கிடக்குது.*

*ஜனாதிபதியின் சிந்தனை எண்ட பேரில செய்ய வெளிக்கிட்டவை இப்ப "ஆர் அவர்?" எண்டு கேக்கிற நிலமை. இத மாதிரித் தான் "பிரெசிடென்ற் இனிசியேற்றிவ்" எண்டு வெளிக்கிட்ட எல்லாம் நடுத் தெருவில வந்து நிக்குது!*

*அலுவலகங்களுக்கு நேரில போற நேரத்தையும், செலவையும் குறைக்கிறதப் பிரதானமான நோக்கமாக் கொண்டு ஆரம்பிச்ச சில வேலைத்திட்டங்கள் எங்கட அதிகாரிகளின்ர "கெட்டித்தனத்தால" நேராப் போய்த் தரிசனம் செய்தால் தான் ஆகுமெண்டு இருக்குது.*

*"ஒன்லைன் பாஸ்போட்" க்கு விண்ணப்பிச்சு, கிட்டடியில இருக்கிற ஏதோ ஒரு பிரதேச செயலகத்தில போய்க் கைநாட்டு வைச்சிட்டு வந்தால், குறிப்பிட்ட நாளுக்குள்ள வீட்டுக்குப் "பாஸ்போட்" வருமெண்டது தான் ஒழுங்கு.*

*ஆரம்பத்தில அப்பிடி வீட்டில இருந்த படி கனபேர் "பாஸ்போட்" எடுத்தும் இருக்கினம். இப்ப ஆகக் குறைஞ்சது ஆறு மாசம் எடுக்குது "அப்பிளிக்கேஷன்" எடுபடுறதுக்கே! அதுக்குப் பிறகு நீங்கள் சமர்ப்பித்த "அப்பிளிக்கேஷன்" னில அது பிழை - இது பிழை எண்டு சொல்லி நேரடியா வாங்கோ எண்டு சொல்லுப்படுகுது. அதுவும் பக்கத்தில இருக்கிற வவுனியாவுக்கோ.. அ'புரத்துக்கோ இல்லை. கொழும்பில இருக்கிற "ஹெட் ஒபிசுக்கு"!*

*"ஹெட் ஒபிசுக்கு"ப் போய்த் தான் "பாஸ்போட்" எடுக்க வேணும் எண்டா, "ஒன்லைன்ல" விண்ணப்பிக்காமல் நேராப் போய் ஒரே நாளில எடுத்துக் கொண்டு வந்திருப்பமே... ??*

*"ஒன்லைன்ல" விண்ணப்பிச்சு ஆறு மாசத்துக்குப் பிறகு நேரில வா எண்டால், காத்திருந்த இவ்வளவு காலமும் வீண், காசு குடுத்துக் கொழும்புக்குப் போய் ரெண்டு நாளை முழுசாச் செலவழிக்கிறதும் வீண் தானே...?*

*இது தான் இப்பிடி இருக்கெண்டா.... ஜனாதிபதியின்ர இன்மொரு திட்டத்தை யாழ்ப்பாணத்தில இருக்கிற அதிகாரிகள் எப்பிடிச் சொதப்பினம் எண்டு சொல்லுறன் பாருங்கோவன்....*

*நாட்டில எந்தப் பாகத்தில இருந்தாலும் - எந்தப் பாகத்தில இருந்தும் பிறப்பு, இறப்பு மற்றும் காணிப்பதிவு ஆவணங்களை "ஒன்லைன்ல" எடுக்கலாம் எண்டு பதிவாளர் ஆணையாளர் திணைக்களம் சொல்லுது. மில்லியன் கணக்கில செலவழிச்சு "நவீன ஸ்ரீ லங்கா" கனவில திட்டத்தை அறிமுகப்படுத்துது.*

*ஆனால் இங்க இருக்கிற அதிகாரிகளோ "நீங்க வேற நாடய்யா - நாங்க வேற நாடு" எண்டது கணக்கா ஸ்ரீ லங்காவில நடைமுறைப்படுத்துற திட்டம் யாழ்ப்பாணத்துக்கு இல்லை எண்டு சொல்லினம்.....*

*காணிக் கந்தோருக்குப் போகாமலே உறுதிக் கொப்பி எடுக்கலாம் எண்டு "ஒன்லைன்ல" போட்டு, காசையும் கட்டிப் போட்டு இருந்தா.. ஆகிறது ஒண்டுமில்ல.... சரி விண்ணப்பத்துக்கு என்ன ஆச்சுது எண்டு தொலைபேசியில அடிச்சுக் கதைப்பம் எண்டு ஆணையாளர் அலுவலகத்துக்கு அழைப்பெடுத்தால், "ஓம்.. உங்கட விண்ணப்பம் கிடைச்சது.. யாழ்ப்பாண "ஒபீஸ்"க்கு அனுப்பி இருக்கிறம். அவை உங்களுக்குத் தேவையானதைச் செய்வினம். விருப்பமெண்டா அவையின்ர தொலைபேசி இலக்கத்தைத் தாறம்... கதையுங்கோ" எண்டு சொல்லி யாழ்ப்பாணம் காணிக் கந்தோரின்ற தொலைபேசி இலக்கத்தைத் தந்திச்சினம்....*

*நானும் வேற இடத்துக்கு எடுக்கிறதை (கொழும்பு) விட எங்கட இடம், எங்கட அதிகாரிகள் எங்கட மொழியில கதைப்பினம் எல்லா அலுவலும் "சிம்பிளா" முடிக்கலாம் எண்ட ஒரு நம்பிக்கையோட "கோல்" எடுத்தன்.*

*அங்க தான் எங்கட அதிகாரிகளின் அர்ப்பணிப்புத் தெரிஞ்சுது. நான் வலு பவ்வியமாத் தான் கதைச்சன்....*

*"ஐயா... நான் இன்னார் கதைக்கிறன்... "ஒன்லைன்ல" உறுதி "கொப்பி" எடுக்க விண்ணப்பிச்சனான்... இப்ப ரெண்டு மாசமாப் போச்சுது. ரெண்டு நாளில வருமெண்டு கிடந்தது.....*

*"அதொண்டும் இங்க எடுக்கேலாது.... நேரில தான் வரவேணும்....." நான் சொல்லி முடிப்பதற்குள் மறு முனையில் இருந்த "கண்டிப்பான" அந்த அதிகாரி கராராகப் பதில் தந்தார்.*

*"வர ஏலாது எண்டதால தானே ஐயா "ஒன்லைன்"இல போட்டனான்? இலங்கை முழுவதுக்கும் ஒரு பதிவாளர் ஆணையாளர் தானே?" நான் கேட்டன்.....*

*"எல்லாம் ஒண்டு தான்... ஆனா இங்க உந்த "ஒன்லைன்" சேவை இல்ல...." நான் கேட்டனோ இல்லையோ... "சடார்" எண்டு தொலைபேசி துண்டிக்கப்பட்டது.*

*அதுக்குப்பிறகு, அவ்வளவு விசியத்தையும் விலாவாரியா எழுதி பதிவாளர் நாயகத்துக்கு எழுத "ஒரே நாளில அலுவல் முடிஞ்சுது'. யாழ்பாணத்தில உந்தச் சேவை இல்லை எண்டு சொன்ன அந்த அதிகாரியே ஒப்பம் வைச்சு "ரெண்டாம் நாள் வீட்டுக்கு உறுதி வந்திட்டுது".*

*நீங்கள் உங்கட கடமையைச் சரியாச் செய்தால், நாங்கள் ஏனப்பா அங்கினேக்க போறம்?*

*அதைவிடுவம், நீங்கள் எங்க போனால் என்ன? எவரிட்டைச் சொன்னால் என்ன? நாங்க அசையவே மாட்டம் எண்டு இருக்கிற ஆக்களும் இருக்கினம் பாருங்கோ..*

*சின்ன வயசில நாட்டக் காக்கவெண்டு போன ஒரு பிள்ளை. சண்டை முடிஞ்சதுக்குப் பிறகு, புனர்வாழ்வுக்குப் போய் அங்க இருந்த படி "கம்பஸ்" க்குப் போய் இப்ப ஒரு பட்டதாரி. அவவும் அரசாங்க உத்தியோகம் பார்க்கிறா..*

*வவுனியாவில இருந்து இருபத்தைஞ்சு "கிலோமீற்றர்" தூரத்தில வீடு. வீட்டில இருந்து ஒவ்வொரு நாளும் வவுனியாவுக்கு வேலைக்காக வந்து போக வேணும். ஊரில இருந்து காலையில ஒரு பஸ் - மாலையில ஒரு பஸ். அதுவும் ஒழுங்கில்ல*

*பாவம் பிள்ளைக்கு கடைசிச் சண்டையில ஒரு கால் சேதம் ஆனாலும் "ட்ரக்டர்" இல இருந்து பஜிரோ வரையும் நல்லா ஓடுவா*

*"மோட்டர் சைக்கிள்" ஒண்டு கிடைச்சிட்டா வேலைக்குப் போய் வாறதில எந்த இடைஞ்சலும் இல்லை.*

*வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில "லைசென்ஸ்" எடுக்க விண்ணப்பிச்சால், அங்கவீனத்தைக் காரணங்காட்டி உமக்கு "லைசென்ஸ்" தர மாட்டம் எண்டு அதிகாரிகள் அடம்பிடிக்கினமாம்..*

*தன்ர நிலைமைய விளங்கப்படுத்தி அந்தப் பிள்ளை ஜனாதிபதிக்கு மனு ஒண்டை அனுப்பியிருக்குது.*

*சட்டத்துக்கு உட்பட்டு அந்தப் பிள்ளைக்கு போன மாசம் 27 ஆம் திகதிக்குள்ள "லைசென்ஸ்" குடுக்க நடவடிக்கை எடுங்கோ!, எண்டு ஜனாதிபதி செயலகம் பணிச்சிருக்குது*

*ஊம். ஊகும் அங்க போனவா அங்கையே போய் "லைசென்ஸ்" எடுக்கட்டும் எண்டு நிக்கனமாம் எங்கட ஆக்கள்.*

*அப்பப் பாருங்கோவன்.*

*சாமி வரங் கொடுத்தாலும், பூசாரி இடங் கொடுக்காது! - என்பது இதைத் தானோ?*

*-நரமுனி-*

# இன்றும் நான் அதிகாரத்திற்காக அன்றி நாட்டைக் கட்டியெழுப்பவே முயல்கிறேன்

## அதிகாரத்திற்கு கனவு காணும் அரசியல்வாதிகள் யதார்த்தத்தை புரிந்துகொள்ளவில்லை என்று ஜனாதிபதி சபையில் தெரிவிப்பு



அரசங்கம் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களின் பலனாக நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருப்பதாகவும், எதிர்காலத்தில் மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களைப் பெற்றுகொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அந்த செயற்பாடுகள் அனைத்தும் அறிவியல் முறைமைகளுக்கு அமைய, படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அதிகாரத்திற்காக ஒரு போதும் தான் பொய் சொல்லவில்லை என்பதோடு, அதிகாரத்திற்காக அன்றி நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே தனது நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று (06) பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் இவ்வாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைப் பெற்றுகொள்ளும் நோக்கில் யதார்த்தத்தை மறந்துவிட்டு, கற்பனைக் கதை சொல்கிறார்கள் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன்று நாட்டின் முன்பிருக்கும் பிரச்சனைகளுக்கு, சில்லறைத்தனமான தீர்வுகள் இல்லை என்றும், அவ்வாறான தீர்வுகளால் நாட்டின் பொருளாதாரத்தை மீளமைக்க முடியாதென்பதை அடிப்படை பொருளாதார அறிவுள்ளவர்கள் அறிவர் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் பயணிக்கும் பாதையின் வெற்றி உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த பாதையில் முன்னேறிச் செல்வதற்கான சட்டத் திட்டங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

போகும் பாதையில் முன்னேறிச் சென்று பொருளாதாரம் வலுவடைவதன் பலனை, நாடு என்ற வகையில் அடைந்துகொள்வதா? இல்லாவிடின் அந்த செயன்முறையிலிருந்து விடுப்பட்டு ஓரிரு வருடங்களுக்கு முன்பிருந்த இருள் யுகத்துக்குள் மீண்டும் செல்வதா? என்பதை தீர்மானிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையில்,

இன்று நமது நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனினும், இதனை ஏற்றுக்கொண்டதாக காட்டிக் கொள்ளாமல், நாம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தை விமர்சிப்பவர்களும் இருக்கின்றனர்.

பொருளாதாரம் வலுவாக இருப்பதாகத் தோன்றினாலும், மக்கள் அதை உணரவில்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் மீது தேவையற்ற வகையில் வரிச் சுமையை அதிகரித்துள்ளதாகவும் கூறுகின்றனர். மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலைகள் தேவையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

பொதுவாக, பூவைக் காயப்படுத்தாமல் தேன் எடுப்பதைப் போல் மக்களைத் துன்புறுத்தாமல் வரி வசூலிக்க வேண்டும் என்ற பழமொழி உண்டு. ஆனால் அந்த நடைமுறையை நாங்கள் பின்பற்றவில்லை என்று விமர்சிக்கின்றனர். எனினும், இவ்வாறு விமர்சிப்பவர்கள் ஒரு விடயத்தை மறந்துள்ளனர். பூக்களை நசுக்கித் தேன் எடுக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன என்பதை அவர்கள் மறந்துள்ளனர். இது நமக்கு சிறந்தவொரு படிப்பினை. ஒரு சாதாரண சூழ்நிலையில், பூக்களை நசுக்காமல் தேன் எடுக்க முடிந்தாலும், இருளில் பயணிக்கும்போது அவ்வாறு செய்ய முடியாது. இன்று நாமும் இருளில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தில் நாம் பொருளாதார தொங்கு பாலத்தில் பயணிக்க நேரிட்டது. இருளில் பயணிக்க நேரிட்டது. இவ்வாறான ஆபத்தான நிலை எங்களுக்கு ஏன் ஏற்பட்டது? எமது பொருளாதாரம் ஏன் வங்குரோத்தடைந்தது? கடந்த கால அரசாங்கங்கள் தொலைநோக்குப் பார்வையற்ற முடிவுகள் எடுத்தமை ஒரு காரணமாகும்.

அரசாங்கத்தின் பல சாதகமான வேலைத் திட்டங்களை பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்த்து, சீர்குலைத்ததும் மற்றொரு காரணமாகும். இந்தக் கட்சிகள் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தின.

இதனால் நாட்டுக்கு முறையான, பரிபூரணமான பொருளாதாரத் திட்டமொன்று தேவைப்பட்டது. இதுபோன்ற திட்டத்தை செயல்படுத்த நாம் பல சந்தர்ப்பங்களில் முயற்சித்தோம். எனினும், இவ்வாறான திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க வாய்ப்புக் கிடைக்காமல் போனது.

1989 ஆம் ஆண்டு, கலாநிதி சந்திம விஜேபண்டார, புத்தசரண பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

அக்கட்டுரையில் புத்தர் உபதேசித்த குடதந்த சூத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

“திட்டமில்லாத வளர்ச்சி சாத்தியமற்றது. திய நிகாயாவின் குடதந்த சூத்திரம், வளர்ச்சிக்கான திட்டங்களின் அவசியத்தை விளக்குகிறது. வளர்ச்சியடையாத நாட்டில் பாட்டாளி வர்க்கம், அரசுக்கு எதிராக நெருக்கடியை ஏற்படுத்தும்போது, அரசாங்கம் ஒரு திட்டத்தின் மூலம் நாட்டை எவ்வாறு மேம்படுத்தியது என்பதை இது காட்டுகிறது.

இது அரசின் அடிப்படைப் பொருளாதாரத் திட்டம். இது வெற்றியடைந்ததாகவும், இதனால் மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, மதிப்புகளின் அடிப்படையில், நல்ல சமூக உறவுகளுடன், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தனர் என்று இந்தச் சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தகைய அறிவியல் மற்றும் திட்டமிட்ட வழியை நாங்கள் இதற்கு முன்னர் பின்பற்றவில்லை. சில குழுக்கள் அத்தகைய வேலைத் திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கவில்லை. இதனால் நாட்டிற்கு என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவர். நாடு வங்குரோத்தடைந்தது. கடனைச் செலுத்த முடியாமல் போனது. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் போனது.

சாதாரண குடிமகன் முதல் பெரிய தொழிலதிபர் வரை அனைவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வரிசைகளின் யுகம் ஏற்பட்டது. பலர் தொழில்களை இழந்தனர். தொழில்களும் வணிகங்களும் சரிந்தன. சிலர் நாட்டை விட்டு வெளியேறினர். நாடு முழுவதும் தீப்பற்றி எரிந்தது. பொருளாதார நரகத்தில் நாடு விழுந்தது.

இந்த நேரத்தில் நாடு அராஜகமாக மாறியது. ஆட்சி நிர்வாகம் சீர்குலைந்தது. பொருளாதார ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கடுமையான ஆபத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது.

இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்கும் சவாலை யாரும் ஏற்க முன்வரவில்லை. அழைக்கப்பட்ட அனைவரும் மறுத்துவிட்டனர். தீயில் குதித்து தீயை அணைக்கும் தைரியம் யாருக்கும் இல்லை.

ஆனால் நாட்டுக்காக அந்த சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். தீயின் நடுவே சென்று தீயை அணைக்க ஆரம்பித்தேன்.

அந்த அயராத முயற்சியின் பலனை இன்று நாடு முழுவதும் அனுபவித்து வருகிறது. இந்த நேரத்தில், அந்த மாபெரும் முயற்சியில் எனக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

நாங்கள் ஒரு சிறந்த, பயணத் திட்டத்திற்கு அடித்தளமிட்டோம். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தோம்.

அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, நாடு நாளுக்கு நாள் இயல்பு நிலைக்கு வந்தது. அழுத்தம் தணிந்தது. துயரங்கள் மெல்லக் குறைய ஆரம்பித்தன.

அதைத் தெளிவுபடுத்தும் சில பொருளாதாரக் குறிகாட்டிகளை இந்த அவையில் முன்வைக்க விரும்புகிறேன்.

2022 முதல் 2023 இரண்டாம் காலாண்டு வரை 6 காலாண்டுகளுக்கு தொடர்ந்து சுருங்கிய நமது பொருளாதாரம், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து புத்துணர்ச்சிப் பெற ஆரம்பித்தது. இந்த ஆண்டு 2 முதல் 3 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என்று சர்வதேச நிதி நிறுவனங்கள் கணித்துள்ளன.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் அரச வருமானத்தை 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரிக்க முடிந்தது. கடந்த ஆண்டு முதன்மைக் கணக்கில் உபரித் தொகையைப் பெற முடிந்தது. இதனால், மூன்று, நான்கு ஆண்டுகளாக அரசுக்கு சேவை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு அனைத்து நிலுவைத் தொகையையும் முடித்துள்ளோம்.

2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், அரசுக்குச் சொந்தமான 52 பெரிய நிறுவனங்கள் மொத்தமாக ரூ.720 பில்லியன் நட்டத்தை எதிர்கொண்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இந்த நிறுவனங்களிடமிருந்து ரூ.313 பில்லியன் இலாபமாகப் பெற முடிந்தது.

பொருளாதார நெருக்கடியால் பல வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆனால் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியுடன், பல வணிக நிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், 17,819 நிறுவனங்கள், கம்பனிப் பதிவாளர் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2023 இல் 22,376 நிறுவனங்கள் பதிவு செய்யயப்பட்டுள்ளன. 2024 ஜனவரியில் 1,995 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பொருளாதார முகாமைத்துவம் காரணமாக, 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 70 சதவீதமாக இருந்த பண வீக்கம், 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5.9 சதவீதமாகக் குறைந்தது.

பண வீக்கம் குறைந்ததால் 30 சதவீதமாக இருந்த வட்டி வீதத்தை 2023ஆம் ஆண்டில் 10 சதவீதத்தையும் விடக் குறைத்து சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் நிவாரணம் வழங்க முடிந்தது.

2022 ஏப்ரல் நடுப்பகுதியில் வெறும் 20 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த அந்நியச் செலாவணி கையிருப்பை, தற்போது 3 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிக்க முடிந்தது. தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர, இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

1977 இற்குப் பிறகு முதன்முறையாக, 2023ஆம் ஆண்டில், கொடுப்பனவு கையிருப்பின் நடப்புக் கணக்கில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. இதன் காரணமாக கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் ரூ.363 ஆக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி நேற்றைய நிலவரப்படி ரூ.308 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது.

இந்த பொருளாதார முன்னேற்றத்தின் விளைவுகளை இன்று முழு சமூகத்திலும் காண முடிகிறது.

கை டிரக்டர்கள் முதல் பெரிய பஸ்கள் வரை பல்வேறு வாகனங்களில் அனுராதபுரத்திற்கும் சிவனொலிபாத மலைக்கும் எத்தனை மக்கள் சென்று வழிபடுகின்றனர்? தலவில, மடுதேவாலய யாத்திரைக்கு எத்தனை பேர் செல்கிறார்கள்? நுவரெலியாவுக்கு எத்தனை பேர் சுற்றுலா செல்கிறார்கள்? கார் வாங்கிய கடனை அடைக்க முடியாமல், வீதியோரம் நிறுத்தி, சிறுசிறு தொழில் செய்வோர் எத்தனையோ பேர் உள்ளனர். தூரப்பயணம் செல்லும் ரயில் பெட்டியில் இருக்கையை முன்பதிவு செய்வது எவ்வளவு கடினமாக இருக்கிறது? முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் எத்தனை பேர் பயணிக்கிறார்கள்? நாடு முழுவதும் எத்தனை சுற்றுலாப் பயணிகள் உள்ளனர்?

வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் இருந்தவர்கள் இன்று அதிகமாக பயணம் செய்கின்றனர். பொழுது போக்க வெளியே செல்கிறார்கள். நோய்வாய்ப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவோ, சடலத்தை மயானத்திற்குக் கொண்டு செல்லவோ வாகனத்திற்கு சிறிது எரிபொருள் பெற முடியாத நாடாக இருந்தோம். வீட்டில் சமைக்க எரிவாயு இல்லாமல், வெளியே விறகு அடுப்பில் சமைத்த நாடு இது. பிள்ளை நோய்வாய்ப்பட்டால், பெரசிடமோல் மாத்திரையை தேடி வீடுவீடாகச் சென்ற நாடு இது. அந்த நிலை இப்போது முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது.

இன்று நாம் காணும் மற்றும் உணரும் பொருளாதார முன்னேற்றத்தை சிலர் விமர்சிக்கின்றனர். கடன் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். கடனை மீளச் செலுத்த ஆரம்பித்தால், நாடு மீண்டும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். நாம் தற்பொழுது நரகத்தில் ஒரு இடைவேளைப் பெற்று, இந்த நிலையை அனுபவிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த விமர்சனங்கள் எந்த அடிப்படையும் அற்றவை என்பதைக் கூற விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கடன்கள் உட்பட அனைத்து கடன்களையும் மறுசீரமைப்பது குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறோம். இந்தப் பேச்சுவார்த்தைகள் விரைவில் வெற்றிகரமாக முடிவடையும் என நம்புகிறோம்.

கடனை மீளச் செலுத்தாதிருக்க 2023 முதல் 2027 வரை தற்காலிக சலுகைக்காலம் கிடைக்கும் என நம்புகிறோம். அதன் பின்னர் 2027 முதல் 2042 வரையிலான காலக்கட்டத்தில் கடனை மீளச் செலுத்த நடவடிக்கை எடுப்போம்.

இலங்கை கடன் சுமையில் உள்ள நாடு. 2022 ஆம் ஆண்டுக்குள், நாம் வருடாந்தம் சுமார் ஆறு பில்லியன் அமெரிக்க டொலரை, வெளிநாட்டுக் கடனாகச் செலுத்த வேண்டியிருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதமாகும். ஒரு நாடு என்ற ரீதியில் தாங்க முடியாத தொகை இது.

கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதன் மூலம், வருடாந்தம் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதத்தில் இருந்து 4.5 சதவீதமாகக் குறைக்க முடியும். இது 50 வீத குறைப்பாக இருக்கும்.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நாம் எட்டிய பொருளாதார வளர்ச்சியை இதேபோன்று தொடர்ந்தால், அரச வருமானத்தை அதிக சதவீதத்தில் தக்க வைத்துக் கொள்ள முடியும். அப்படி நடந்தால் கடனை மீளச் செலுத்துவது நாட்டுக்குச் சுமையாக இருக்காது.

தற்போது, அரச வருமானத்தை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 11 சதவீதமாக உயர்த்த முடிந்துள்ளது. அதற்காக எமக்கு வற் வரியை விதிக்க நேரிட்டது. அது மிகவும் கடினமான முடிவு. அவ்வாறு வரி விதிக்கும் முடிவை நாங்கள் மிகவும் கஷ்டத்துடனே எடுத்தோம். ஆனால் இந்த பொருளாதார நோயைக் குணப்படுத்த வேறு மாற்றுவழி இல்லை. இந்த வலியை எமக்கு சிறிது காலம் அனுபவிக்க நேரிடும்.

வற் வரி விதிப்பால், அரசின் வருமானம் வலுப்பெற்றது. கடனைஅடைக்கும் பலம் எம்மிடம் உள்ளது என்பது சர்வதேச சமூகத்தின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் வருமானம் அதிகரித்து, பொருளாதாரம் மீண்டு வருவதால், ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது. ரூபாயின் மதிப்பு வலுவடையும்போது எரிபொருள் உள்ளிட்ட இறக்குமதிப் பொருட்களின் விலை குறையும். ரூபாயின் பெறுமதி வலுவடைவதால் அனைத்து வற் செலுத்தும் நிறுவனங்களும் இப்போது பலனடைகின்றன. முழு நாடும் அந்த நன்மையைப் பெறுகிறது. எதிர்காலத்தில் பல நன்மைகள் கிடைக்கும்.

இந்தப் பாதையில் நாம் வெற்றிகரமாகத் தொடர்ந்தால், இந்த ஆண்டு இறுதிக்குள் நமது பொருளாதாரம் ஸ்திரமாகிவிடும்.

தொடர்ச்சி 6ம் பக்கம்...

# கல்முனை ஸாஹிரா பழைய மாணவர்கள் புனரமைத்த உதவி அதிபர் காரியாலயம்

(நூருல்ஹுதா உமர்)



கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் 1991 தொடக்கம் 1996 வரை ஒரே வகுப்பில் (6பு-11பு) கல்வி கற்ற பழைய மாணவர்களின் அனுசரணையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட உதவி அதிபருக்கான

அலுவலக அறையை கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு அண்மையில் அந்த மாணவ சமூகத்தின் தலைவர் பொறியியளாளர் முஹமட் றிஸ்கான் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கல்முனை சாஹிராக் கல்லூரிக்கு உதவி அதிபருக்கான காரியாலயம் ஒன்றை புனர்நிர்மாணம் செய்து தருமாறு பாடசாலை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய குறித்த மாணவ சமூகமானது அக்காரியாலயத்தின் தேவைகளை கண்டறிந்தது.

அதை தொழில் நிமித்தம் வெளிநாடுகளில் வாழும் வகுப்புத் தோழர்களின் உயர் பங்களிப்பில் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்து பாவனைக்கு கையளித்துள்ளனர். இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை சாஹிரா கல்லூரியில் பதியமிட்டோருக்கான கௌரவமும், விளைந்த பயிர்களின் மீளிணைவும் எனும் தொனிப்பொருளில் கடந்த 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் குறித்த வகுப்பு மாணவர் சமூகம் பாடசாலை காலத்தில் கல்வி கற்றுத் தந்த ஆசிரியர்களை வரவழைத்து கௌரவிக்கும் விழாவையும் வெற்றிகரமாக நடத்தி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை அல் பஹ்ரியா பாடசலையில் வருடாந்த விளையாட்டுகள் ஆரம்பம்



(சர்ஜூன் லாபீர்)

கல்முனை அல் பஹ்றியா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பினால் வருடாந்தம் நடாத்தும் பஹ்றியன் பிரிமியர் லீக் சீசன்-2 இம்முறையும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் இப்பாடசாலையில் 1996 முதல் 2020 ஆம் ஆண்டு வரை க.பெ.த(சா-த) பரீட்சையில் மாணவர்கள் தோற்றிய வருடங்களின் அடிப்படையில் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

பஹ்றியன் பிரிமியர் லீக் சீசன்-2 இல் இம்முறை கிரிக்கெட் மற்றும் வலைப்பந்து ஆகிய விளையாட்டுக்களை நடாத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை விண்ணப்பங்களை இரவு 8 மணி முதல் இரவு 10 மணி வரை பாடசாலை பழைய மாணவர் சங்க காரியாலத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இடம்பெற ஏற்பாடாகியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.






# கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வுக் கலந்துரையாடல்



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் நீண்ட நாட்களாக நிரந்தர தீர்வுகள் இன்றி காணப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் கற்பிட்டி பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் இன்று (06) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கழிவு முகாமைத்துவம் பற்றிய முழுமையான விளக்கம் வடமேல் மாகாண கழிவு முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ மாரசிங்க வினால் வழங்கப்பட்டது.

“ பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை தீ இட்டு எரிப்பதில் இருந்து விளகி மீள் சுழற்சி முறையினை நடைமுறைப்படுத்தல் “ என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் கற்பிட்டி பிரதேச சபையின் முன்னால் உப தலைவர், உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், மத ஸ்தானங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், மீனவ சங்கத் தலைவர்கள், சமூக சேவை ஆர்வலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்கள், கல்விப் பணிமனையின் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 3 வருடங்கள் கல்விச் சேவையாற்றிய ஆசிரிய ஆலோசகருக்கு பிரிவுபசாரம்



(வி.ரி.சகா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் எம்.பி.எம்.யூசுப் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றதை முன்னிட்டு அங்கு பிரிவுபசார நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.எல்.எ.மஜீட் ஏற்பாட்டில் கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் வலயக்கல்விப் பணிமனையில் இந்த நிகழ்வு இன்று இடம்பெற்றது. அங்கு ஆசிரிய ஆலோசகர் யூசுப்பின் சேவைகள் பற்றி பலரும் பாராட்டி பேசினர் .

இறுதியில் அவருக்கு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள் .

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான மஜீத், யசீர்அறபாத், நிதர்சினி, நிலோபரா உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இறுதியில் ஓய்வு பெறும் ஆசிரிய ஆலோசகர் யூசுப் ஏற்புரை வழங்கினார்.

# இன்றும் நான் அதிகாரத்திற்காக....

4ம் பக்கத்தொடர்ச்சி...

மேலும், அரசு நிறுவனங்களின் நட்டத்தை மக்கள் வரிப் பணத்தில் இருந்து ஈடுசெய்யும் முறையை நிறுத்தியுள்ளோம். அந்த நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

வரி வலையமைப்பு விரிவுபடுத்தப்படும். அந்தத் திட்டத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டில் மொத்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 1 மில்லியனுக்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 130 சதவீதம் அதிகரிப்பாகும். பணம் அச்சடிப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

அரச நிதி மற்றும் பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்தவும் எளிதாக்கவும் சட்டக் கட்டமைப்பு மற்றும் செயல்முறைகளை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் தேவையான சட்ட சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தெற்காசியாவில் முதன்முறையாக, ஆளுகை கண்டறியும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் நிர்வாகத்தை மேம்படுத்தவும் ஊழல் அபாயங்களை எதிர்த்துப் போராடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதலீட்டை ஈர்ப்பதற்காக ஒரு புதிய நிறுவனம் நிறுவப்படும். வெளிநாட்டு நிதித் துறைகளுக்கான தொடர்ச்சியான பிரவேசம் உறுதிப்படுத்தப்படும்.

விவசாயத்துறை நவீனமயப்படுத்தப்படும். உணவுப் பாதுகாப்பின் கீழ் பாரிய அளவிலான பண்ணைகளை ஆரம்பிக்க பல வெளிநாடுகள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டுச் சந்தைகள் படிப்படியாக ஏற்றுமதிக்காக திறக்கப்படுகின்றன. இங்கு, பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

நமது நாட்டை பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றி, பிராந்திய பொருளாதார மற்றும் சேவை மையமாக அபிவிருத்தி செய்வோம். துறைமுக நகரம், சர்வதேச நிதி மையமாக மாற்றப்படும்.

ஆனால், இந்தத் திட்டத்தின் ஊடாக தொடர்ந்து பயணிப்பதன் மூலம் மாத்திரமே இவை அனைத்தையும் மேற்கொள்ளமுடியும்.

நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த திட்டங்கள் காரணமாக நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு பல வசதிகளையும் சலுகைகளையும் வழங்க முடிந்துள்ளது.

'உறுமய' திட்டத்தின் கீழ் இருபது இலட்சம் குடும்பங்கள் காணி உரிமையாளர்களாக மாறுவர். பல தலைமுறைகளாக இழந்த காணி உறுமையை அவர்கள் மீண்டும் பெறுவார்கள்.

வறுமையில் இருக்கும் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புக்கான கொடுப்பனவை மூன்று மடங்காக உயர்த்த முடிந்தது. அதனால் குறைந்த வருமானம் பெறும் 24 இலட்சம் குடும்பங்களுக்கு 'அஸ்வெசும' வழங்கப்படுகிறது. 45 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டம் வழங்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் 'ஸ்மார்ட்' வகுப்பறைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியம் புலமைப் பரிசில்களை வழங்குகிறது. நோயாளிகளுக்கு வழங்கும் நிவாரணத் தொகையையும் ஜனாதிபதி நிதியம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

'மலைநாட்டு தசாப்தம்' என்ற திட்டத்தின் கீழ் 89 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களை மேம்படுத்தும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம். அதற்காக ஒரு பிரதேச சபைக்கு ரூ.100 மில்லியன் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவு செலவுத் திட்ட பன்முகப்படத்தப்பட்ட நிதியைக் கொண்டு தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 25 பிரதேச சபைகளைத் தெரிவு செய்து விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

சுற்றுலா வியாபாரம் வளர்ச்சி கண்டுள்ளது. அதனால் பலர் பயனடைகின்றனர். அந்தத் துறையில் மேலும் பல முன்னேற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். சரிந்து கிடந்த பொருளாதாரம் ஓரளவு வலுவடைந்துள்ளது. அதன் பலனாக படிப்படியாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குகிறோம். வர்த்தகச் சமூகத்தின் நலனுக்காக பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். இம்மாதத்தில் மின்சாரக் கட்டணத்தில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் பாடசாலை புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள், மருந்து உள்ளிட்ட பொருட்களுக்கு வற் வரி விலக்களிக்க எதிர்பார்த்துள்ளோம். எதிர்காலத்தில் வற் வரியைக் குறைக்கவும் முடியும்.

நாம் நாளாந்தம் நெருக்கடிகளை எதிர்கொண்டாலும், வலுவான பொருளாதாரத்தைத் கட்டமைத்து வருகிறோம். பொருளாதாரம் வலுவடையும்போது மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குவோம். உரிய திட்டங்களின் கீழ் அவற்றைச் செய்கிறோம். பொருளாதாரத்திற்கு நெருக்கடி ஏற்படும் வகையில் நிவாரணம் வழங்கி நாட்டை மீண்டும் நரகத்திற்குள் தள்ளிவிட நாம் தயாரில்லை. அதனால் அனைத்துச் செயற்பாடுகளையும் படிப்படியாகவும் அறிவியல் முறைக்கமையவுமே முன்னெடுத்து வருகிறோம்.

சில்லறைத்தனமான விடயங்களால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுக்காண முடியுமென சிலர் கருதுகின்றனர். வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களிடமிருந்து 10 - 100 டொலர் வரை சேகரிக்கலாம் என சிலர் யோசனை கூறுகிறார்கள். அது பாடசாலையை அண்மித்து வசிப்போரிடம் பணம் சேகரித்து பாடசாலையை அபிவிருத்தி செய்ய முற்படுவது போன்ற செயலாகும். பொருளாதாரம் பற்றிய அறிவை ஓரளவேனும் கொண்டிருப்பவர்கள், அவ்வாறான முறைகளில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை அறிவார்கள்.

இந்தத் தருணத்தில் நம் முன்பிருக்கும் கேள்வி ஒன்றுதான்! நாம் தற்போது செல்லும் பாதையில் முன்னேறிச் செல்வதா? இல்லையா? என்ற கேள்வியே இருக்கிறது.

இவ்வாறு முன்னேறிச் சென்று, பொருளாதாரம் வலுவடைந்ததன் பலனை ஒரு நாடு என்ற வகையில் அடைவதா? இல்லாவிட்டால் இந்த நிலையிலிருந்து விலகிச் சென்று ஓரிரு வருடங்களுக்கு முன்பு இருந்ததைப் போல வங்குரோத்து நிலையை அடைவதா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

நரகத்தில் மீண்டும் விழ வேண்டுமா? இல்லாவிட்டால் தற்போதை பாதையில் சுவர்க்கத்தை சென்றடைவதா? தற்போதைய பாதையைத் தவிர வேறு வழிமுறைகள் எவையும் இல்லை. நாம் இதுவரையில் அடைந்திருக்கும் வெற்றிகள் அதனை உறுதி செய்துள்ளன. அதனால் இதே வழியில் முன்னேறிச் செல்வதற்கான சட்ட திட்டங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

அதே நோக்கில் பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

இவை அனைத்தையும் பிரசித்தமாகும் நோக்கில் செய்யவில்லை. பல அரசியல் குழுக்கள் பிரசித்தமாவதற்காக கற்பனைக் கதைகளைச் சொல்கிறார்கள். கனவுக் கோட்டைகளையும் கட்டுகின்றனர். அவர்களுக்கு நாட்டின் யதார்த்தமான நிலைமை புரியவில்லை. அதிகாரத்திற்காக முட்டிமோதிக்கொள்கிறார்கள். அதிகாரத்திற்காகப் பொய் சொல்கிறார்கள்.

ஆனால் நான் ஒரு போதும் அதிகாரத்திற்காகப் பொய் சொல்லவில்லை. எனது எதிர்காலத்திற்காகவும் நான் பணியாற்றவில்லை. நாட்டின் எதிர்காலத்திற்காகவே செயற்படுகிறேன். அதனால் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் செயற்டவில்லை. நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

எமது திட்டங்கள் சமூகத்தின் ஒவ்வொரு தனி நபருக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கலாம். அதனை நாம் உணர்ந்துள்ளோம். ஆனால் தனித்தனியே ஒவ்வொரு நபரினதும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது சரியான முறையாக அமையாது. அதனால் ஒருபோதும் நிலையான தீர்வை அடைய முடியாது. ஒட்டுமொத்த நாட்டையும் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். வலுப்பெறும் பொருளாதாரத்தின் பலன்களை அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கவே எதிர்பார்க்கிறோம்.

அதற்காக பேராசிரியர் ஹேன்பிட்டகெதர ஞானவாச தேரர் 1983 எழுதி வெளியிட்ட "எமக்கு பௌத்த ஆட்சி முறை அவசியமாவது ஏன்" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயத்தை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"தனிநபர் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிட்டாது. மாறாக நெருக்கடி மேலும் வலுவடைந்து அதர்மம், மோசடி அதிகரித்து, அமைதியும் சமாதானமும் நலிந்து போகும்" என புத்த பெருமானின் போதனையில் கூறியுள்ளார். பொதுவான காரணத்தை அறிந்து தீர்வை வழங்க வேண்டியதன் அவசியத்தையை பௌத்த தர்மம் போதிக்கிறது. அதனால் நாம் அனைவரும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையிலான தீர்வுக்குச் செல்வோம்.

இந்த சரியான பயணத்தில் இணைந்துகொள்ள ஒன்றுபடுமாறு சபையில் இருக்கும் அனைவரிடமும் மக்களிடமும் கேட்டுகொள்கிறோம்" என்று ஜனாதிபதி தெரிவித்தார். (அ)






## அலி சப்ரியின் நாடாளுமன்ற வருகை ஒரு மாதத்துக்கு இடைநிறுத்தம்!



(கற்பிட்டி - சியாஜ்)

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் நாடாளுமன்ற சேவை இன்று புதன்கிழமை முதல் ஒருமாத காலத்துக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளதாக சபாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷ வினால் 2024 ஜனவரி 24 ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் இந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அலிசப்ரி ரஹீமை நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்துவதற்கான பிரேரணைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் இன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சட்டவிரோதமாக தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை நாட்டுக்குள் கொண்டுவந்தமை தொடர்பில் அலிசப்ரி ரஹீம் சர்ச்சையில் சிக்கினார்.

துபாயிலிருந்து நாடு திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள அதிமுக்கியஸ்தர்களுக்கான முனையத்தின் ஊடாக, சட்டவிரோதமாக தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை எடுத்து வந்த போது சுங்க அதிகாரிகளால் குறித்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு 78 மில்லியன் ரூபாவாகும்.

இதையடுத்து அலி சப்ரி ரஹீமால் சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட தங்கம் மற்றும் ஸ்மார்ட் போன்கள் அரசுடமையாக்கப்பட்டதோடு, 7.4 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அபராதமும் அவருக்கு விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடையாமோட்டை தேசிய பாடசாலையில் 2023 ம் கல்வி ஆண்டிற்கான பரிசளிப்பு விழா

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம்-தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் தரம் ஆறு தொடக்கம் பதினொன்று வரை மாணவர்களுக்கான 2023 ஆம் கல்வி ஆண்டின் பரிசளிப்பு விழா அண்மையில்

பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம். தௌபீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், முந்தல் மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ஏ.எச்.எம். ஹாரூன் விசேட அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு, இதன்போது முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளை பெற்ற மாணவர்களுக்கு விசேட அதிதி மற்றும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

குறித்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2024 இல் வெளியிடப்பெற்றது.